# திருமறைத்தீபம்





**THE BIBLE LAMP**

மலர் 1 | ஏப்பிரல் - ஜூன் 1995 | இதழ் 2

## கண்கள் திறக்க...!

அன்புள்ள வாசகர்களுக்கு,



கிறிஸ்துவின் நாமத்தில் என் நல்வாழ்த்துக்கள். கர்த்தருடைய கிருபையின் உதவியோடு நாம் ஆரம்பித்துள்ள இச் சிறிய முயற்சிக்குக் கிடைத்து வரும் ஆதரவிற்குத் தலை வணங்குகிறோம். உங்களுடைய அன்பான ஆதரவும், கருத்துக்களும் இவ்வூழியத்திற்குப் பேருதவியாக அமையும். பலவிதமான சபை ஊழியங்களுக்கு மத்தியில் இப்பத்திரிகைக்கும் நேரம் ஒதுக்க அனுமதித்து, ஆதரவளித்து ஜெபத்தோடு என்னை ஊக்குவித்து வரும் என் சபை மக்களுக்கு என் நன்றி என்றும் உரித்தாகும். அவர்களுடைய உதவியில்லாமல் இதை நான் ஆரம்பித்திருக்கவே முடியாது. முதலாவது இதழுக்குக் கிடைத்துள்ள ஆதரவு எமக்கு அதிக ஊக்கத்தை அளிக்கிறது. சந்தா எதுவும் இல்லாமல், பலரும் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தில் இதனை வெளியிடுகிறோம். ஆகவே, இதைப் பெறும் வாசகர்கள் மற்றவர்களுக்கும் இதனை அறிமுகப்படுத்தி இவ்வூழியத்தில் பங்கு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இவ்விதழில் 'கெரிஸ்மெட்டிக் இயக்கம்' கட்டுரையின், இரண்டாம் பாகம் வெளிவருகிறது. அனேகர் முதல் பகுதியை வாசித்துப் பயனடைந்ததாக எழுதியுள்ளார்கள். எந்தவொரு இயக்கத்தையும் சாடுவது எமது நோக்கமல்ல. ஆனால், போலித்தனமானதும், திருமறைக்குப் புறம்பானதுமான இவ்வியக்கப் போதனைகள் கிறிஸ்தவத்தின் அத்திவாரத்தையே அசைக்க முயற்சிப்பதால், மகுடியின் நாதத்தில் மயங்கி நிற்கும் நாகத்தைப்போல, இவ்வியக்கத்தின் பிடியில் அகப்பட்டுத் தள்ளாடிக் கொண்டிருக்கும் அனேகருடைய கண்கள் இக்கட்டுரை மூலம் திறக்கப்பட வேண்டுமென்பதுதான் எமது ஜெபம். இது சம்பந்தமான கட்டுரைகளை நீங்கள் தொடர்ந்தும் இப்பத்திரிகையில் எதிர் பார்க்கலாம்.

நம்மைத் தீண்டி வரும் இன்னுமொரு விஷம் போன்ற போதனைதான் கிறிஸ்தவமும், திராவிட சமயங்களும் ஒன்றே என்பது. எப்படியாவது கிறிஸ்துவிற்கு ஆள் சேர்க்க வேண்டும் என்று அலைவோருக்கு இச்செய்தி சர்க்கரைபோல் இனிக்கலாம். ஆனால், இது கிறிஸ்துவின் பெயருக்கே இழிவு தேடித்தரும் செயல். இதைக்குறித்து கேள்வி - பதில் பகுதி ஆராய்கிறது. இதுபற்றி அதிக தகவல் அறிந்த வாசகர்கள் எமக்கு எழுதலாம்.

தேவகிருபை அல்ல, சுயமுயற்சியே ஒருவர் கர்த்தரை அறிந்து கொள்ள உதவும் பேராயுதம் என்று போதிப்பதோடு, அந்த அடிப்படையிலேயே பெரும்பாலானோர் இன்று கிறிஸ்தவ ஊழியங்களையும் எம்மத்தியில் நடத்தி வருகின்றார்கள். எங்கு தனிமனித வல்லமையும், அதிகாரமும் சர்வ சக்தியாக போற்றப்படுகின்றதோ அங்கே திருமறைக்கு இடமில்லை. பாவத்தால் கறைபடிந்த மனித சித்தத்தின் சுய செயற்பாடல்ல, கிறிஸ்துவின் விலை மதிப்பில்லாத, சர்வ சுதந்திரமும், வல்லமையுமுள்ள கிருபையே மனிதனைப் பாவத்திலிருந்து கரை சேர்க்கிறது, என்ற 'கிருபையின் போதனை'களின் அறிமுகக்கட்டுரையும் இவ்விதழில் ஆரம்பமாகின்றது.

படித்துப் பயனடையுங்கள். கர்த்தரைத் துதியுங்கள்.

அன்புடன்,
R. பாலா

## எண்ணங்கள்!

பத்து வருடங்களுக்கு முன்பு 'திருமறைத்தீபம்' வெளிவந்திருக்குமானால், எத்தனையோ கிறிஸ்தவர்கள் கெரிஸ்மெட்டிக் இயக்கத்தில் இருந்து விடுதலை அடைந்திருப்பார்கள். இப்பத்திரிகை என்னையும் என் திருச்சபை மக்களையும் சத்திய வசனத்தில் வழி நடத்துகிறது. எல்லாத் தமிழ்க் கிறிஸ்தவர்களும் புரிந்து கொள்ளும் விதத்தில் ஆசிரியர் எழுதியதைக் குறித்து அவருக்கு நான் நன்றி கூறுகிறேன்.

பாஸ்டர் ஜேம்ஸ் இந்திரன்,
மலேசியா

திருமறைத்தீபம் படித்தேன், சுவைத்தேன், துதித்தேன். மாய்மாலங்களை வேரறுக்கும் இப்படி ஒரு பத்திரிகை தமிழ் நாட்டில் வராதா என்று ஏங்கிக் கொண்டிருந்தேன். இதை ஆரம்பிக்க உதவிய ஆண்டவரைத் துதிக்கிறேன். முதல் பத்திரிகையே அந்நிய பாஷையைக் குறித்து என் உள்ளத்தில் நான் நினைத்திருந்ததை அப்படியே படம் பிடித்துக் காட்டி விட்டது.

ஆர். பாலமுருகன்,
கோவை, தமிழ்நாடு

### இந்த இதழில்

◆ ஆசிரியரின் மடல்
◆ 'கெரிஸ்மெட்டிக்' இயக்கம்
◆ கிருபையின் போதனைகள்
◆ கேள்வி? பதில்!
◆ புத்தக விமர்சனம்

# 'கெரிஸ்மெட்டிக்' இயக்கம்

**இன்று உலகம் முழுதும் கிறிஸ்தவர்களைக் குழப்பிக்கொண்டிருக்கும் 'கெரிஸ்மெட்டிக்' இயக்கத்தின் தோற்றத்தையும், போதனைகளையும், திருமறையின் அடிப்படையில் ஆராயும் இக்கட்டுரை, அதன்பிடியில் அகப்பட்டுத் தத்தளிப்பவர்களுக்கு மட்டுமல்லாது மற்றவர்களுக்கும் பயன்படும் என்று நம்புகிறோம்.**

**- ஆசிரியர்.**

(கடந்த இதழின் தொடர்ச்சி)

### தீர்க்கதரிசனங்கள்

இவ்வியக்கத்தார் கர்த்தர் தாம் வெளிப்படுத்தத் தீர்மானித்த அனைத்தையும் திருமறையின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் என்பதை நம்ப மறுப்பதால், அவர் தொடர்ந்தும் தீர்க்க தரிசனங்கள் மூலம் பேசுவதாக சொல்லி வருகிறார்கள். 'பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், தீர்க்க தரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்.' என்ற எபிரேயரின் வார்த்தைகளின் விளக்கம் இவர்களுக்குப் புரிவதில்லை. தேவன் பேச வேண்டிய அனைத்தையும் பேசிமுடித்து வேதத்தில் தந்திருப்பதால், அவர் வேதத்திற்கு வெளியில் இருந்து தொடர்ந்து பேச வேண்டும் என்று எதிர்பார்ப்பது மடமை.

தேவன், திருமறையை முழுமையாகத் தருவதற்கு முன்பு, தீர்க்க தரிசனங்களை அனுமதித்த காலங்களில் கூட, அவை சோதித்து அறியப்பட வேண்டுமெனத் தெளிவாகக் கூறியுள்ளார் (உபாகமம் 18:20-22). ஆனால், இன்று 'தீர்க்க தரிசனம்' என்ற பெயரில் தேவ செய்தி சொல்ல முற்படுபவர்கள் எவ்வித சோதனைக்கும் இடம் கொடாது செயல்பட்டு வருகிறார்கள். இவர்களுடைய தீர்க்கதரிசனங்கள் எத்தனை பேருக்குத் தலை வலி இருக்கிறது, வயிற்று வலி இருக்கிறது என்று கண்டு பிடிப்பதாகத்தான் இருக்கிறதே தவிர கர்த்தருடைய வார்த்தையின்படி தீர்க்கதரிசனங்களுக்கு இருக்க வேண்டிய இலக்கணங்களைக் கொண்டிருக்க வில்லை. திருமறையை முறையாகப் போதித்து, அதன் போதனையின்படி மற்றவர்களை வழிநடத்தாமல், போலித் தீர்க்க தரிசனங்களின் மூலம் கிறிஸ்தவர்களுக்கு ஆசைகாட்டி தம்மை வளர்த்துக் கொள்ளும் இவர்களை அடையாளங் கண்டு, நம்மை காத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

### அடையாளங்களும், அற்புதங்களும் (Signs and Wonders)

'கெரிஸ்மெட்டிக் இயக்கம்' அடையாளங்களிலும் அற்புதங்களிலும் அதிக நாட்டங் கொண்டுள்ளது. 'அற்புதங்கள்' இல்லாத கிறிஸ்தவத்திற்கு இவ்வியக்கத்தின் அகராதியில் இட மில்லை. (கிறிஸ்தவமே கர்த்தருடைய அற்புதமான வெளிப்படுத்தல்தான் என்பது மட்டும் போதாது என்று இவர்கள் எண்ணுகிறார்கள்). நோய் தீர்த்தல், கனாக்காணுதல், தரிசனங்கள், ஆவியினால் அடித்துப் போடப்படுதல் என்று இவர்களுடைய அடையாள, அற்புதங்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

பழைய, புதிய ஏற்பாட்டு அற்புதங்களும், அடையாளங்களும் தேவசெயல்களாக இருப்பது மட்டு மல்லாமல், அவை தேவகுமாரனாகிய இயேசுவின் வருகையின் அறிவிப் பாகவும், அவர் இவ்வுலகில் இருந்தபோது தேவகுமாரன்தான் என்று உறுதிப்படுத்தும் நிகழ்ச்சிகளாகவும் இருந்தன. அது மட்டுமல்லாமல், கிறிஸ்து இயேசுவின் நற்செய்தியையும், அதன் மூலம் அவர் இவ்வுலகில் ஏற்படுத்த வந்த திருச்சபையையும் உறுதிப்படுத்த தேவனே தன் குமாரன் மூலமாகவும், அப்போஸ்தலர்கள் மூலமாகவும் அற்புதங்களையும், அடையாளங் களையும் செய்தார். இன்று கர்த்தருடைய திட்டப்படி திருச்சபை நிறுவப்பட்டு விட்டதாலும், அப்போஸ்தலர்கள் தொடர்ந்து எம்மத்தியில் இல்லாததாலும் அற்புதங்களுக்கோ, அடையாளங் களுக்கோ இனி எந்தவித அவசியமு மில்லை. இருந்தபோதும் 'கெரிஸ் மெட்டிக் இயக்கத்தார்' அப்போஸ் தலர்கள் கால நடவடிக்கைகளும், அப்போஸ்தலப்பணியும் இன்றும் தொடர்வதாக நம்பி வருகிறார்கள். ஒருவர் அப்போஸ்தலராக இருப்பதற் கான தகுதிகளில் ஒன்று, அவர் இயேசு வாழ்ந்த காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டுமென்பது. இதை மறந்து விட்டு இவர்கள் இன்று சபைகளில் அப்போஸ்தலர்களை நியமிப்பது மட்டுமல்லாமல் அவர்கள் செய்த பணிகளையும் செய்ய முற்படுகிறார்கள். இங்கிலாந்து நாட்டில் ஊழியம் செய்த (1822 - 1834) எட்வர்ட் இர்விங் (Edward Irving) என்ற மிகப் பிரபலமான ஒரு போதகர் இப்படிப்பட்ட தவறான போதனைகளுக்கு இடங்கொடுத்து இறுதியில் தனது ஊழியத்தையும், உயிரையும் இழந்தார்.

பல வருடங்களுக்கு முன் கெத்தரின் குல்மன் (Kathryn Kulman) என்ற பெண் அமெரிக்காவில் தனது கூட்டங்களில், அற்புதங்கள் செய்வதை வழமையாகக் கொண்டிருந்தார். நோய் தீர்க்கும் முயற்சிகள் மட்டுமல்லாமல், நிலத்தில் விழுந்து புரள்வது போன்ற காரியங்களும் அவருடைய கூட்டங்களில் அனுமதிக்கப்பட்டன. இன்று பல 'கெரிஸ்மெட்டிக் கூட்டங்களில் நாம் அவதானிக்கின்ற 'ஆவியினால் அடித்துப் போடப்படுதல்' (Slain in the Spirit), கட்டுங்கடங்காமல் நிறுத்தமுடியாத 'பரிசுத்த சிரிப்பலை எழுப்புதல்' (Holy laughter), கதறி அழுதல் போன்ற நிகழ்ச்சிகளுக்கும் இவரே முன்னோடி. 'கெரிஸ்மெட்டிக் இயக்கம் இவற்றைத் தங்கள் இயக்கத்தின் 'மூன்றாவது அலை' நிகழ்ச்சிகளாகக் கருதுகின்றது. இவை அவர்களுடைய ஆராதனையின் முக்கிய அம்சங்களாக இன்று இருந்து வருகின்றன. ஆராதனையின் ஒரு அங்கமாக இவை அமைய வேண்டுமென வேதத்தில் எங்குமே போதிக்கப் படவில்லை. இத்தகைய செயல்கள் பரிசுத்த ஆவியையே அவமானப் படுத்தும் செயல்களாக உள்ளன. இவை தெய்வ பக்திக்கே முரணானவை. வேதம் இவற்றை எந்தவிதத்திலும் அனுமதிப் பதில்லை.

1740 துகளில் முழு உலகமும் அவதானித்த, அமெரிக்காவின் நியூ இங்கிலாந்தில் ஏற்பட்ட 'The Great Awakening' என்று அழைக்கப்படும் சமய எழுச்சிக் காலத்தில் யோனத்தன் எட்வர்ட்ஸ் (Jonathan Edwards), இத்தகைய செயல்களை போலித் தனமானவை என்றும், ஆவிக்குரிய அடையாளங்கள் அல்ல என்றும் விவரித்தார். அக்காலங்களில் ஆவியின் வல்லமையினாலும், பாவத்தின் குற்ற உணர்வினாலும் பலரும் நடுக்க முற்றவேளையிலும் போலித்தனமான சில செயல்களையும் எட்வர்ட்ஸ் அவதானித்தார். இருந்தபோதும் அக்கால

# வேதாகமத்தின் அடிப்படையிலான ஓர் ஆய்வு

ங்களில்கூட இப்படி விழுந்து புரண்டு ஒருவரும் சிரிப்பலையெழுப்ப வில்லை. இன்றுவரை இத்தகைய புரட்டுகளை நாம் புறசமயங்களில்தான் அவதானிக்க முடிந்தது.

பம்பாயிலும், சென்னையிலும் ஊழியம் செய்துவிட்டு கல்கத்தாவிற்கு வந்த அமெரிக்க மதபோதகர் மொரிஸ் செரூல்லோ (*Morris Cerullo*), அங்குள்ள 'பார்க் சர்க்கஸ் திடலில் '*ஊமைகளை* பேச வைப்பேன், செவிடர்களைக் (காது) கேட்க வைப்பேன்' என்று முழங்கினார். ஆயிரக்கணக்கானோர் அதை வேத வாக்கைப் போல் கேட்டார்கள். செரூல்லோ குணப்படுத்தியதாகக் கூறிய ஒருவரைப் பிடித்துக் கொண்ட மக்கள், கேள்விக்கணைகள் தொடுத்தபோது அவன் ஊமையாகவோ, செவி டனாகவோ என்றுமே இருநததில்லை என்று அறிந்தார்கள். இதனால் ஆத்திரம் அடைந்த கூட்டம் செரூல்லோ மீது கல்மாரி பொழிந்தது. இந்திய அரசு செரூல்லோவை விரும்பத்தகாதவர் என்று அறிவித்து நாட்டைவிட்டு வெளியேற்றியது (*ஆதாரம் 'இந்தியா டுடே.' ஆகஸ்ட் 1993*).

இத்தகைய செயல்கள் நமக்குப் புதிதல்ல. கூட்டங்கள் போட்டு நோய் தீர்க்கிறோம் என்று பலரையும் ஏமாற்றும் செயல்கள் அனேக இடங்களில் நடக்கின்றன. வேதாகமக் கல்லூரிகளில் கூட இதற்கான பயிற்சிகள் கொடுக்கப் படுகின்றன. இயேசு எப்போதாவது கூட்டம் போட்டு இப்படி அற்புதங்கள் செய்தாரா என்று ஒருவருமே எண்ணிப் பார்ப்பதில்லை. அப்போஸ்தலர்கள் கூட தங்கள் வாழ்நாட்களில் இப்படி கூட்டம்போட்டு அற்புதங்கள் செய்ய முயற்சித்ததில்லை. திருமறையில் எங்குமே இப்படிச் செய்யும்படி போதிக்கப்படவுமில்லை. 'பிரியமானவர் களே, உலகத்தில் அநேகக் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவியையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்து அறியுங்கள்' (*1 யோவான் 4:1*) என்று வேதம் போதிக்கிறது. திருமறையில் காணப்படும் அடையாளங்களையும், அற்புதங்களையும் ஆராய்ந்து பார்த்தால் அவை குறிப்பிட்ட காலப்பகுதிகளில் குறிப்பிட்ட நோக்கங்களுக்காகவே நிகழ்ந்தவையாக உள்ளன. இது தெரியாமல், விடாப்பிடியாக அவற்றை நாமும் அனுபவிக்க வேண்டும் என்று மல்லுக்கு நிற்பது தவறு. அனுபவங்களை யும், அற்புதங்களையும் நாடியலையும் கெரிஸ்மெட்டிக் இயக்கம் வேதத்திற்கு மதிப்புத்தருவதில்லை. வேதத்தைப் போதிப்பதைவிட மக்களைக் கவரவும், மயக்கவும் எது சிறந்த வழி என்று புதிதாக எதையாவது நாடிச் செல்வதே இதன் இயல்பாக இருக்கின்றது.

வெளிநாடுகளில் உள்ள கெரிஸ்மெட்டிக் தலைவர்களின் வழிமுறைகளைப் பின்பற்றி தம்மையும், தங்கள் ஊழியத்தையும் வளர்த்துக் கொள்ளும் அனேகரைத் தமிழ் மக்கள் மத்தியில் இன்று பார்க்க முடிகிறது. அமெரிக்காவின் ஓரல் ரொபட்ஸைப் பின்பற்றி கிறிஸ்தவ ஊழியம் என்ற பெயரில் கல்லூரிகளையும், வைத்திய சாலைகளையும் சிலர் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றில் சேர்வதற்கு வசூலிக்கப்படும் பணத்தைப் பற்றிய கதையே ஒரு தனிக்கதை. கர்த்தர் தன் கனவில் வந்து இதைச் செய்யச் சொன்னார், அதைச் செய்யச் சொன்னார் என்று சொல்லி மக்களை ஏமாற்றிவரும் எத்தர்களும் நம்மத்தியில் குறைவில்லாமல் இருக்கிறார்கள். ஒரு பிரபலமான கெரிஸ்மெட்டிக் இவேஞ்சலிஸ்ட், கடவுள் தன்னோடு கனவில் பேசி 'நீ எல்லோருக்கும் ஊழியம் செய்துவிட்டாய். ஆனால் குழந்தைகளுக்கு மட்டும் ஒன்றும் செய்யவில்லை. ஆகவே, நீ குழந்தை களுக்கு ஏதாவது செய்ய வேண்டும்' என்று சொன்னதாகக்கூறி மக்களிடம் ஒரு குழந்தைக்கு ஆயிரம் ரூபாய் என்று வசூலித்து வருவதையும் பலரறிவார்கள். பணம் கொடுப்பவர்களின் குழந்தைகள் பரீட்சையில் தேறவும், அவர்களது உடல் நலத்திற்காகவும் இந்த 'இவேஞ்சலிஸ்ட்' தொடர்ந்து ஜெபம் செய்வாராம். வேதத்தில் இத் 'திருவிளையாடல்' களுக்கெல்லாம் எங்கே இடமிருக்கின்றது என்றெல்லாம் ஆராயாமல் ஏதோ ஒரு அற்புதம் நிகழும் என்று எதிர்பார்த்து பணம் கொடுத்து ஏமாறும் இளிச்சவாயர்களும் அனேகம்.

கர்த்தரின் பெயரில், தேவ பயமென்பதே இல்லாமல், தாம் நினைத்ததையெல்லாம் சொல்லி இவர்கள் மக்களை ஏமாற்றி வருகிறார்கள். 'கர்த்தர் உன் பக்கத்தில் நிற்கிறார்', 'அவர் உன் மீது இறங்கிக் கொண்டிருக்கிறார்', 'அவர் என் அருகில் நிற்கிறார்', 'அவரை நான் பார்க்க முடிகின்றது' என்ற சொற்றொடர்கள் இவ்வியக்கத் தலைவர்கள் நாவில் சரளமாகப் புகுந்து விளையாடுவதைக் காணலாம். இவை கேட்பவர்களைக் கவரும் வார்த்தைப் பிரயோகங்கள். ஆனால், திருமறை இப்படிக் கர்த்தர் ஒருவர் மீது வந்திறங்குவதாகவோ, அவரை ஒருவர் ஊனக்கண்களால் பார்க்க முடியுமென்றோ எங்குமே போதிப்பதில்லை. வேதம் சொல்வ தெல்லாம், அப்படி அவரைப் பார்த்த எவரும் உயிரோடிருக்க முடியாது என்பதுதான் (*யாத்திராகமம் 33:20; 1 தீமோ. 6:15, 16*).

தாம் பின்பற்றும் தலைவர்களின் காலில் விழுந்து வணங்கும் மதிகெட்ட மனிதர்களையும் தமிழ் நாட்டில் தவிர வேறெங்கும் பார்க்க முடியாது. கர்த்தரை அறியாத மக்கள் இப்படிச் செய்தால் அதற்குக் காரணம் சொல்லலாம். ஆனால் சமீபத்தில், தமிழ் நாட்டிற்கு வருகை தந்த 'போல் யொங்கி சோ' வின் (இவர் தன் பெயரை 'டேவிட்' என்று மாற்றிக் கொண்டுள்ளார் என்று செய்தி) காலில் விழுந்து வணங்கி அந்த மனிதனை ஒரு 'அரசனைப்' போல நடத்திய தமிழகத்தைச் சேர்ந்த கெரிஸ்மெட்டிக் இயக்கத்தின் தலைவர்களின் செயலை என்னவென்று கூறுவது. கிறிஸ்தவர்கள் என்ற பெயரில் கோமாளிகள் போல் நடந்து தேவனுக்கே கெட்ட பெயரை வாங்கித் தரும் இப்பச்சோந்திகளை நாம் இனங்காண வேண்டியது அவசியம்.

## ஒரே திருச்சபை ! (Ecumenism)

கிறிஸ்தவர்கள் எல்லோரையும் ஒன்று சேர்க்கும் இயக்கம் என்ற ஒரு போலித்தனமான மாயத்தோற்றத்தையும் இவ்வியக்கம் கொண்டிருக்கிறது. திருச்சபைகளுக்கிடையில் உள்ள பிளவுகளையெல்லாம் அகற்றி ஐக்கியத்தை ஏற்படுத்தவே தங்களைக் கர்த்தர் எழுப்பியிருப்பதாக இவ்வியக் கத்தார் கூறிக் கொள்கிறார்கள். ஆகவே, திருமறையின் போதனைகளின் அடிப்படையில் அல்லாமல் வெறும் அனுபவத்தின் அடிப்படையில் எல்லோரையும் ஒன்று சேர்க்கும் கைங்கரியத்தை இவ்வியக்கம் செய்து வருகிறது. இன்று இவ்வியக்கம் கத்தோலிக்கர்கள் மத்தியிலும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருக்கிறது. கிறிஸ்தவர்கள், கத்தோலிக்கர்கள் எல்லோரையும் ஒன்று சேர்த்து ஒரு பொதுத் திருச்சபையை எழுப்புவதுதான் இவ்வியக்கத்தின் பெருநோக்கம்.

இவ்வியக்கத்தைச் சேர்ந்த மைக்கல் ஹாப்பர் (*Michael Harper*) என்ற இங்கிலாந்தைச் சேர்ந்த அங்கிலிக்கன் கெரிஸ்மெட்டிக், கத்தோலிக்கர்கள், கிறிஸ்தவர்கள், கெரிஸ்மெட்டிக்ஸ் ஆகியோருக்கிடையில் உள்ள வேறுபாடுகளைவிட, அவர்களை இணைக்கும் காரியங்களே மிக அதிகம்' என்று கூறியுள்ளார்.[1] தன்சபைத்

தலைவரான பாப்பாண்டவரைக் கிறிஸ்துவின் சர்வ அதிகாரங்களும் கொண்ட உலகப் பிரதிநிதி என்றும், மரியாளைத் தெய்வமென்றும், திருமறையைவிட கத்தோலிக்கசபைப் பாரம்பரியங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும் போதிக்கும் கத்தோலிக்க சபைக்கும் திருமறையைத் தழுவிய கிறிஸ்தவத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்? டேவிட் வொட்சன் (David Watson) என்ற அங்கிலிக்கன் கெரிஸ்மெட்டிக் 'பெந்தகொஸ்தே நாட்களுக்குப்பிறகு உலகில் ஏற்பட்ட மிகப் பெரிய அவல நிகழ்ச்சி 16-ம் நூற்றாண்டில் எழுந்த சீர்திருத்த இயக்கம்தான்' என்று கூறியுள்ளார்.[2] இவரும் ரோமன் கத்தோலிக்கர்களுடன் கிறிஸ்தவர்கள் இணைவதை ஆதரிக்கின்றவர். ஆகவே, கத்தோலிக்க சபைக்கெதிராக போர்க்கொடி தூக்கிய புரட்டஸ்தாந்து சீர்திருத்தவாதம் அர்த்தமற்ற செயல் என்பது இவருடைய வாதம்.

திருமறை, கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்தவ சபைகளுக்கும் இடையில் இருக்க வேண்டிய ஐக்கியத்தைப்பற்றித் தெளிவாகப் போதிக்கின்றது. ஆனால் அவ்வாறான ஐக்கியமும், ஒற்றுமையும் திருமறை போதிக்கின்ற ஒரே கர்த்தரையும், ஒரே விசுவாசத்தையும் அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டுமே அல்லாது, ஒன்றுக்கொன்று முரண்பாடான போதனைகளையும், திருமறைக்கு எதிரான செயல்களையும் கொண்டு அமைய முடியாது (யோவான் 17; எபேசியர் 4). திருமறையைத் தூக்கி எறிந்துவிட்டு, சத்தியத்திற்கு முரணாக ஏற்படுத்தப்படும் எந்த ஐக்கியமும் இயேசுவை இழிவுபடுத்தும் செயலாகும். இதைத்தான் இன்று கெரிஸ்மெட்டிக் இயக்கத் தலைவர்கள் தங்கள் திருப்பணியாகக் கொண்டிருக்கிறார்கள்.

### முடிவாக

சாத்தானின் கைங்கரியங்களுக்கு கெரிஸ்மெட்டிக் இயக்கம் இடம் கொடுத்திருப்பது இன்று மறுக்கமுடியாத உண்மை. இயேசு சாத்தானைப்பற்றித் தெளிவாக, 'அவன் ஆதிமுதற் கொண்டு மனித கொலை பாதகனாக இருக்கின்றான்; சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடியாதல் அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்' (யோவான் 8:44) என்று எச்சரித்தார். பிசாசு இன்று திருச்சபையை ஒழிப்பதையே தனது நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றது. பிசாசானவன் 'தந்திரத்தோடும்', 'வஞ்சனையோடும்', 'ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டு', 'சகல வல்லமையோடும், அடையாளங்களோடும், பொய்யான அற்புதங்களோடும்' 'உலகமனைத்தையும் மோசம் போக்கிக் கொண்டிருக்கிறான்' (எபே. 6:11; 1 தீமோ. 4:1; 2 கொரி. 11:3, 14; 2 தெசலோ. 2:9; வெளி. 12:9)

சாத்தானின் பிடியில் சிக்கி, திருமறைக்குப் புறம்பான இத்தனை தவறான போதனைகளுக்குத் தூபமிட்டு வளர்த்து வரும் கெரிஸ்மெட்டிக் இயக்கத்தின் கைப்பாவயாக எத்தனையோ உண்மைக் கிறிஸ்தவர்கள் இருந்து வருகிறார்கள். அவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்த போதும் விளக்கில் விழப்போகும் விட்டில் பூச்சியைப்போல விபரமறியாது, வழிதெரியாது தம் உணர்ச்சிகளுக்கு மட்டும் உணவூட்டி ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சியற்று இருந்து வருகிறார்கள். இவர்களுக்கு எனது தாழ்மையான ஒரே வேண்டுகோள்! திருமறையை மட்டும் உங்கள் கையிலெடுத்து அதன் பக்கங்களில் இதுவரை நீங்கள் விசுவாசித்து வந்த போதனைகளுக்கு என்ன ஆதாரங்கள் இருக்கின்றன என்று ஆராய்ந்து பாருங்கள். பவுல் அப்போஸ்தலன் போதித்தபோது பேரியர்கள் அப் போதனைகள் வேதத்தின் அடிப் படையில் அமைந்தவையா என்று ஆராய்ந்து பார்த்தது போல் நீங்களும் ஜெபத்தோடு வேதத்தை படியுங்கள். சத்திய வசனம் நிச்சயம் உங்களைக் கரையேற்றி, ஆவிக்குரிய வாழ்க்கையில் விடுதலையைப் பெற்றுத் தரும்.

அதுமட்டுமல்ல, ஒரு நல்ல சபையையும் நீங்கள் நாடிப்போக வேண்டும். நல்ல போதனையும், ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடையத் துணை புரியக்கூடிய போதகர்களும் நமக்கு அவசியம். வேதத்தைப் போதித்து அதன் வழியில் கர்த்தரிடம் அவர்கள் வழி காட்டுகிறார்களா என்றும் ஆராய்ந்து பாருங்கள். வெறும் உணர்ச்சிகளுக்கு மட்டும் தூபமிட்டு, திருமறைக்கும் அதன் போதனைகளுக்கும் மதிப்புக் கொடுக்காமல், ஆடல், பாடல்களிலும், மந்திர தந்திரங்களிலும் மட்டும் நாட்டமுள்ளவர்களைவிட்டு விலகியோடுங்கள். அப்படியானவர்கள் மத்தியில் நீங்கள் தொடர்ந்திருந்தால் அவர்களின் கள்ளப்போதனைகளும், தவறான வழிமுறைகளும் உங்கள் இருதயத்தைப் பாழடித்துவிடும் (2 கொரி. 6:17; 2 தெசலோ. 3:6, 14-15).

**References:**


1. Test the Spirit, C.S.Butler, Page 102.

2. Test the Spirit, C.S.Butler, Page 103.


**Recommended Reading:**


1. Victor Budgen, "The Charismatics and the Word of God, " Evangelical Press.

2. C.S.Butler, "Test the Spirit," Evangelical Press.

3. Peter Masters and John Whitcomb, "The Charismatic Phenomenon," Wakeman Trust.

4. Peter Masters, "The Healing Epidemic," Wakeman Trust.


# 'சிரிப்பலைகள்'

கெரிஸ்மெட்டிக் இயக்கத்தினர் மத்தியில் இன்று புதிதாக எழுந்துள்ள ஒரு எழுச்சி ஆராதனைக் கூட்டங்களில் 'சிரிப்பலை' எழுப்புதல். தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த கெரிஸ்மெட்டிக் இவேஞ்சலிஸ்ட் ரொட்னி ஹாவார்ட் பிரவுன் (Rodney Howard Browne) இக்கைங்கரியத்தை ஆரம்பித்து வைத்துள்ளார். 'ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்' என்று பலமுறை சத்தமிட்டுச் சொல்லி கூட்டத்தில் இருப்பவர்களை இவர் தொட்டவுடன் அவர்கள் நிலத்தில் திடீரென விழுகிறார்கள். விழுந்த பலரின் வயிற்றை இவர் தொட அவர்கள் நிறுத்தமுடியாத கட்டுக் கடங்காத 'சிரிப்பலைகளை' எழுப்பு கிறார்கள். அமெரிக்காவில் 'கார்பென்டர்ஸ் ஹோம் சர்ச்சில்' நிகழ்ந்த இந்நிகழ்ச்சியை அச்சபை வீடியோ படமெடுத்து எல்லாக் கிறிஸ்தவர்கள் மத்தியிலும் இவ்வெழுச்சி பரவும் முகமாக, அனுப்பிவைத்துக் கொண்டிருக்கிறது. இந்தச் 'சிரிப்பலை' எழுப்பும் செயலை அவர்கள் பரிசுத்த ஆவியால் அடையும் ஆனந்தம் என்று கூறிக் கொள்கிறார்கள்.

திருமறையில் எங்குமே போதிக்கப் படாத புதிது புதிதான சிரிப்புக்கிடமான செயல்களையெல்லாம் 'ஒளியின் தூதனுடைய வேசத்தைத் தரித்துக் கொண்டு' உலவிவரும் சாத்தானின் கைப்பாவைகளாக இருந்து பலரும் செய்து வருகிறார்கள். அதில் இன்னு மொன்றுதான் இந்தச்சிரிப்புக் கிடமான 'சிரிப்பலை"யும். இது தமிழ்க் கிறிஸ்தவர் களைப் பாதிக்கப் போகும் நாட்கள் அதிக தூரத்தில் இல்லை. இத்தகைய கோமாளித்தனமான கூட்டங்களை நிராகரித்து '....தேவனுக்குக் கீழ்ப்படிந் திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.' (யாக்கோபு 4:7)

# 'கிருபையின் போதனைகள்' என்றால் என்ன?

**'கிருபையின் போதனைகள்' என்ற சொற்றொடர் பலருக்குப் புதிதாக இருக்கலாம். சிலர் அது குறித்துக் கேள்விப்பட்டிருக்கலாம். ஒரு சிலர் அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தும், அதில் தெளிவில்லாது இருக்கலாம். இக்கட்டுரை இப்போதனைகளை சரித்திர பூர்வமாக ஆராய்ந்து அறிமுகப்படுத்துகிறது.**

இதைப்பற்றி நாம் சரிவர அறிந்து கொள்ள வேண்டுமானால் முதலாது 'கிருபை' என்ற வார்த்தையின் பொருளைப் புரிந்து கொள்ள வேண்டும். பழைய, புதிய ஏற்பாட்டிலே காணப்படும் இவ்வார்த்தை, நமக்கு மேல் உள்ள ஒருவர், நாம் அடையத்தகுதியற்ற தயவின் மூலம் நம்மோடு ஓர் உறவை ஏற்படுத்திக் கொண்டுள்ளார் என்பதைக் குறிக்கும். ஆகவே, தேவ கிருபை கர்த்தர் நம்மோடு ஏற்படுத்திக் கொண்டுள்ள ஓர் உடன்படிக்கையையும், தெரிந்து கொள்ளுதலையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. கர்த்தருடைய நேர்பயனுடைய (*Effectual*) அழைப்பின் மூலம் (*கலா. 1:15*) பாவியாகிய மனிதன் தன் வாழ்வில் மாறுதல் அடைந்து, இத் தேவ கிருபையின் மூலம் மனந்திரும்புதலையும், விசுவாசத்தையும் அனுபவிக்கிறான் என்று திருமறை கூறுகின்றது (எபே. 2:8-9; 2 தீமோ. 2:25). இக்கிருபையைத் தேவகுமாரனாகிய இயேசு மட்டுமே அளிக்கக் கூடியவராக இருக்கிறார் என்றும் வேதம் போதிக்கின்றது (யோவான் 1:14, 16-17; ரோமர் 5:21; 1 கொரி. 1:4).

கிருபை என்ற வார்த்தையின் உள்ளடக்கம், அதன் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் விடுதலையைக் குறிப்பதாக இருக்கின்றது. இவ்விடுதலையை நாம் நமது சுய முயற்சிகளின் மூலமாகவோ, தகுதியின் அடிப்படையிலோ பெற்றுக் கொள்ள முடியாது (எபே. 2:1-10; தீத்து 3:3-7). 2-ம் நூற்றாண்டு காலப்பகுதியில் தேவ கிருபையை அடையும் வழிமுறைகளில் மனிதனுடைய முயற்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இதனால் பரிசுத்த ஆவியின் செயற்பாடே நிராகரிக்கப்பட்டது. பாவம் என்று ஒன்றில்லை என நிராகரித்த பெலேஜியஸ் (Pelagius) என்ற பிரிட்டிஸ் துறவிக்கு எதிராக ஆகஸ்டின்தான் (Augustine) கிருபையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். இது இவருடைய சொந்தப் போதனையல்ல. ஆவியின் அருளினால், ஆகஸ்டினால் இவ்வுண்மையைத் திருமறையில் தெளிவாக அவதானிக்க முடிந்தது. மனிதனை சிறைபிடித்து ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் பாவத்திலிருந்து, அவனுக்கு விடுதலை தந்து, மனந்திரும்புதலையும், விசுவாசத்தையும் அளிக்கக்கூடியது கிருபை மட்டுமே என்று ஆகஸ்டின் போதித்தார். அவரைப் பொறுத்தவரையில் தேவ கிருபையே மனிதனைப் பாவத்தின் அடிமைத்தளையில் இருந்து அகற்றி கர்த்தருடைய சித்தப்படி நடக்கச் செய்யக்கூடியதாக இருக்கிறது.


அதன் பிறகு பல நூற்றாண்டுகள் கிருபையைப்பற்றி பல தவறான விளக்கங்கள் கொடுக்கப்பட்டு வந்தன. ஆனால் கடவுளின் காருணியத்தினால் 16-ம் நூற்றாண்டு காலப்பகுதியில்தான் இதைச் சூழ்ந்திருந்த இருள் விலக்கப்பட்டு, தெளிவாக தேவகிருபையின் பொருள் விளக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் 'சீர்திருத்தவாதிகள்' (Reformers) என்று அழைக்கப்படும் கர்த்தரால் எழுப்பப்பட்ட தேவஊழியர்கள் தங்கள் அருளுரைகள் மூலம் கிருபையின் போதனைகளுக்குப் புத்துயிர் கொடுத்தார்கள். இவர்களுடைய போதனையில் தனி மனிதனின் செயலுக்கல்லாது தெய்வீகக் கிருபைக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. திருச்சபையின் கைங்கரியத்தினாலும், மதபோதகர்களின் தயவினாலும் மட்டுமே இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று இருந்த நிலமைக்கு சாவுமணியடிக்க கர்த்தரால் எழுப்பப்பட்ட மார்ட்டின் லூதரும், ஜோன் கல்வினும் கிருபையின் மூலமாகவே ஒருவன் கிறிஸ்தவனாக மாறுவது மட்டுமல்லாது, தொடர்ந்தும் அவன் கிறிஸ்தவ வாழ்க்கையையும் வாழ முடியும் என்று ஆணித்தரமாகப் போதித்தார்கள். ஒருவனது சுய முயற்சியாலும், சித்தத்தினாலும் தேவனை அறிந்து கொள்ளலாம் என்று அக்காலத்தில் பொதுவாக நம்பப்பட்ட போதனையின் அடித்தளத்தையே இவர்கள் அசைத்து சுக்குநூறாக்கினார்கள். கிருபையைத் தேவன் தன் திட்டப்படி, தன்னால் தெரிந்து கொள்ளப்பட்ட மனிதனுக்கு இலவசமாக அளிக்கிறார் என்ற போதனைக்குக் கல்வினே முறைபடுத்தி வடிவம் கொடுத்தார். இதன் அடிப்படையில் அமைந்த போதனைகளைத்தான் 'கிருபையின் போதனைகள்' என்று அழைக்கிறோம்.

இதனால், மனிதன் கடவுளை அறிந்து கொள்வதற்கு செய்ய வெண்டிய காரியம் ஒன்றுமே இல்லை; நாம் நினைத்தபடி வாழ்ந்து விடலாம்; அவர் தனக்குத் தேவையான நேரத்தில் நம்மைத் தெரிந்து கொள்வார் என்று எண்ணிவிடக்கூடாது. கிருபையின் போதனைகள், பாவத்தின் பிடியில் இருக்கும் மனிதன் தனது சுயமுயற்சியால் கடவுளை அறிந்து கொள்ள முடியாது என்றுதான் கூறுகின்றதே தவிர, மனிதன் அதற்கான முயற்சிகளில் ஈடுபடமாட்டான், ஈடுபடமுடியாது என்று கூறவில்லை (ரோமர் 1:18-23). பாவியாகிய மனிதன் என்ன செய்தாலும், எதைச் செய்தாலும் அவனது இருண்டுபோன கண்களுக்கு அவர் தென்பட மாட்டார் என்பதுதான் வேதவாக்கு. ஆகையால், ஆவியின் அனுக்கிரகத்தினாலும், தேவகிருபையினாலும் மட்டுமே அவன் அவரை அறிந்து கொள்ள முடியும்.

இக்கிருபையின் அடிப்படையில் அமைந்த போதனைகளை நாம் தெளிவாகப் பார்ப்பதற்கு முன்னால் இப்போதனைகளுக்கு எப்படி, ஏன் எதிர்ப்புத் தோன்றியது, இன்று உலகின் பல பாகங்களிலும் இதற்கெதிரான கொள்கைகளின் வழியில் கிறிஸ்தவர்களும் திருச்சபைகளும் போய்க்கொண்டிருக்கும் காரணம் என்ன என்றும் நாம் ஆராய்தல் அவசியம். அடுத்த இதழில் இதைக்குறித்து நாம் விவரமாகப் பார்ப்போம்.

**மலேசியா, தமிழ்நாட்டின் சேலம் ஆகிய பகுதிகளில் அந்நாட்டு பாப்திஸ்து சபைகளினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கூட்டங்களில் ஜூலை 9-26 வரை இவ்விதழாசிரியர் பேசவிருக்கிறார். இக் கூட்டங்களைக் கர்த்தர் ஆசீர்வதிக்கும்படியாக ஜெபிக்குமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.**

# புத்தக விமர்சனம்



## கிறிஸ்தவன் யார்?

*கார்டினர் ஸ்பிரிங், D. D.*
*தமிழ் பாப்திஸ்து வெளியீடு, கீழ்ப்பாக்கம்,*
*சென்னை 600 010. 83 பக்கங்கள்*

இப்புத்தகம் கார்டினர் ஸ்பிரிங் (Gardiner Spring) என்பவர் எழுதிய *'The Distinguishing Traits of Christian Character'* என்ற நூலின் தமிழாக்கம். கார்டினர் ஸ்பிரிங், அமெரிக்காவில், நியூயோர்க் நகரில் ஐம்பத்து ஐந்து வருடங்கள் போதகராக பணிபுரிந்து வந்தவர். இந்நூலை இவர் ஜொனத்தன் எட்வர்ட்ஸின் *(Jonathan Edwards) 'The Religious Affections'* என்ற புத்தகத்தைத் தழுவி எழுதியுள்ளார். எட்வர்ட்ஸின் அழியாப்புகழ் பெற்ற எழுத்துக்களின் சாரத்தை ஒவ்வொரு கிறிஸ்தவனும் வாசித்துப் பயனடையக்கூடிய முறையில் ஸ்பிரிங் தனது சொந்த நடையில் தந்துள்ளார் (இவ்விரு புத்தகங்களும் ஆங்கிலத்தில் தொடர்ந்தும் பதிப்பிலிருக்கின்றன). தமிழ் பாப்திஸ்து வெளியீடு இதனைத் தமிழ்க்கிறிஸ்தவர்களும் பயனடையும் விதத்தில் தமிழில் வெளியிட்டுள்ளது.

**ஸ்பிரிங்கின் இந்நூல் எதைப்பற்றி ஆராய்கிறது?**

இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டிருக்கிறேன் என்பதை நான் அறிவதெப்படி? இவை இரண்டுமே வெவ்வேறான கேள்விகளாக இருந்தபோதும், வேதம் இவ்விரண்டிற்கும் தெளிவான பதிலைத் தருகின்றது. முதலாவது கேள்விக்குப் பதில், ஒருவன் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு தன் பாவத்தில் இருந்து மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை ஆண்டவராக விசுவாசிக்க வேண்டும் (அப்போஸ். 20:21) என்பதுதான். ஆனால் இரண்டாவது கேள்விக்கு வித்தியாசமான பதில் தேவைப்படுகிறது. முதலாவது கேள்வி இரட்சிப்பைப்பெற்றுக்கொள்வதற்கான வழியைத் தேடுகிறதாகவும், இரண்டாவது கேள்வி, ஒருவன் இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டிருக்கிறான் என்பதற்கு என்ன ஆதாரம் என்று ஆராய்கிறதாகவும் இருக்கிறது. வேதம் இந்த இரண்டாவது கேள்விக்கு விடையாக, நீங்கள் விசுவாசம் உள்ளவர்களோ என்று நீங்களே உங்களை சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள் என்று கூறுகின்றது. இந்த இரு கேள்விகளுக்கும் வேதம் தருகின்ற பதிலை வேறுபடுத்தி அறிந்து கொள்ளத்தவறியதால் இன்று கிறிஸ்தவர்களையும், திருச்சபைகளையும் ஒரு பெருங்குழப்பமே கடல் போலச் சூழ்ந்துள்ளது.

இன்றைய கிறிஸ்தவர்கள் மத்தியில், யாராவது, நான் இரட்சிப்பை உண்மையிலேயே பெற்றுக்கொண்டிருக்கிறேன் என்பதை அறிந்து கொள்வதெப்படி என்று கேட்டால், அவர்களுக்கு, கிறிஸ்தவர்கள் இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று வேதம் போதிப்பதை விசுவாசிக்க வேண்டும் என்ற பதில் மட்டும்தான் கிடைக்கிறது.

இக்கேள்விக்கு, இந்நூலில் ஸ்பிரிங் திருமறையின் அடிப்படையில் 'வரலாற்றுப் பூர்வமான கிறிஸ்தவத்தை' சான்றாகக் கொண்டு பதில் தருகிறார். கிறிஸ்துவின் பிள்ளைகளின் வாழ்க்கையில், தேவனுடைய கிருபையின் செயலின் அடையாளமாக 'வேறுபடுத்திக் காணக்கூடிய நேர்முக அடையாளங்கள்' காணப்படும் என்பது இவரது வாதம். இதை நிரூபிக்குமுகமாக முதலாவது ஒருவன் கிறிஸ்துவின் பிள்ளையல்ல என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டும் அடையாளங்களை நம்முன் வைத்து, அதன்பின் ஒருவனுடைய வாழ்வில் கர்த்தருடைய கிரியை நிகழ்ந்திருப்பதைக் காட்டும் தெளிவான அடையாளங்களையும் எடுத்து விளக்குகிறார்.

கிறிஸ்தவர்கள் என்று நாம் வெறுமனே சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் விண்ணுலகடைந்து விட முடியாது. திருமறை காட்டும், கிறிஸ்தவனுடைய வாழ்வில் இருக்க வேண்டிய அடையாளங்களோடு, எமது வாழ்க்கையை ஒப்பிட்டுப் பரிசோதித்து அறிந்து கொள்வதால் மட்டுமே நாம் தேவசமாதானத்தில் நிலைத்திருக்க முடியும். அப்படிச் செய்ய மறுக்கிறவனோ, அத்தகைய உணர்வே இல்லாதவனோ, கர்த்தருடைய பிள்ளையாக இருக்க முடியாது. இத்தகைய சுயபரிசோதனையின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் திருமறை பல இடங்களில் போதிக்கின்றது (மத்தேயு 7:21; யோவான் 10:27; 1 கொரி. 6:9; 2 தீமோ. 2:19; கலா. 5:19-21; எபி. 5:9). அத்தோடு யோவான் எழுதிய முதலாவது நிருபத்திலும் குறிப்பாக இதைப்பற்றிய தெளிவான போதனை தரப்பட்டுள்ளது (1 யோவான் 2:3; 3:14).

எப்படியாவது, எதைச்செய்தாவது நாலுபேரை கிறிஸ்துவிடம் கொண்டுவந்துவிட வேண்டும் என்று, இயேசுவுக்கு ஆள் சேர்க்கும் பட்டாளம் மலிந்திருக்கும் இன்றைய சூழ்நிலையில், வழிதவறிப்போன பலரும் வேதத்தின் அடிப்படையில் தங்களை சோதித்து அறிந்து கொள்ள இப்புத்தகம் நிச்சயம் உதவும். இதை வாசிப்பவர்களின் வாழ்க்கையில் கீழ்வரும் நோக்கங்கள் நிறைவேற வேண்டுமென்பது எமது தாழ்மையான ஜெபம்.

1. விசுவாசத்தில் உறுதிக்குறைவுடைய கர்த்தருடைய பிள்ளைகளின் விசுவாசம் உறுதியடைய வேண்டும்.
2. திருமறையிலே காணப்படாத போலியான ஒரு விசுவாசத்தைக் கொண்டிருப்பவர்கள் அதிலிருந்து விடுதலை பெற்று கர்த்தரை அறிந்து கொள்ள வேண்டும்.
3. கிறிஸ்துவை பிரசங்கிப்பவர்கள் சத்தியத்தில் தெளிவான அறிவு பெற்று, ஆவியின் அனுக்கிரகத்தோடும், வல்லமையோடும் வேதத்தைப் போதிக்க வேண்டும்.

இது கிறிஸ்தவர்கள் அனைவரும் தவறாது வாசித்துப் பயனடைய வேண்டிய புத்தகம்.

## அடுத்த இதழில்

**'கர்த்தர் கட்டியெழுப்பும் திருச்சபை'**
**(The Church Which God is Building)**

# கேள்வி? - பதில்!



*இச்சஞ்சிகை ஆசிரியரிடம் பொதுவாகக் கூட்டங்களில் பலர் கேட்ட முக்கியமான கேள்விகளையும் பதிலையும் ஏனையோரது பயன்கருதி இப்பகுதியில் வெளியிடுகிறோம்.*

## கிறிஸ்தவமும், திராவிட சமயங்களும்

**○ *திராவிட சமயங்களுக்கும் கிறிஸ்தவத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? கிறிஸ்தவமும் சைவமும் ஒன்றுதான் என்ற முறையில் சிலர் போதித்து வருகிறார்களே, திருமறையில் இதற்கு என்ன ஆதாரம் உண்டு?***

✱ இப்போதனை இன்று தமிழகம், மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளில் தமிழ்க் கிறிஸ்தவர்கள் மத்தியில் பரவியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. சிலர், இப்போதனை இந்துக்களைக்கவர ஒரு அருமையான வழி என்று நினைத்து பயன்படுத்தி வருகிறார்கள். இதுபற்றி சிறிது விளக்கமாக பதில்கூற வேண்டியது அவசியம்.

### அ. இவர்கள் போதிப்பதென்ன?

டாக்டர் மு. தெய்வநாயகம் (*விவிலியம், திருக்குறள், சைவசித்தாந்தம் ஒப்பாய்வு*), ஞானசிகாமணி (*அகத்தியர் ஞானம்*) போன்றோர் வடவராகிய ஆரியர்களின் செல்வாக்கற்ற, கலப்பில்லாத திராவிட சமயங்கள், தமிழகத்திற்கு வருகை தந்த அப்போஸ்தலனாகிய தோமாவின் (தோமா தமிழகத்திற்கு வருகை தந்தார் என்பது வரலாற்றால் நிரூபிக்கப்படாத ஆதாரபூர்வமற்ற ஒரு ஊகம் மட்டுமே) கிறிஸ்தவப் போதனைகளின் செல்வாக்கினால், தனித்துவமுள்ள, உருவவழிபாடற்ற, ஒரே தேவனைக் கொண்ட தமிழர்களின் சமயமாக இருந்தது என்றும், சைவசித்தாந்தமும், திருக்குறளும், சித்தர்களின் பாடல்களும் கிறிஸ்தவ செல்வாக்கினால் வளர்ந்த இவ்வாதி திராவிட சமயங்களைப் பற்றித்தான் போதிக்கின்றன என்றும் எழுதியுள்ளார்கள். இப்போதனைகளை இன்னும் பெரிதுபடுத்தி சாது செல்லப்பா போன்றோர் இந்துக்களைக் கவரும் நோக்கில் கிறிஸ்தவப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அதுமட்டுமல்லாது, கிறிஸ்தவத்திற்கும், இந்து மதத்திற்கும் இவ்வளவு தொடர்பு இருக்கும்போது நாம் ஏன் அவர்களோடு சமமானமுறையில் ஒரே மேடையில் அமர்ந்து இருபகுதியுமே பயனடையும் விதத்தில் அமைதியான கலந்துரையாடல்களை (Dialogue) நடத்தக்கூடாது? என்ற முறையிலும் தயானந்தன் பிரான்ஸிஸ் (*தமிழ்ச் சைவம்*) போன்றோர் எழுதி வருகிறார்கள். இப்போதனைகள் இன்று தமிழகத்தின் வேதாகமக் கல்லூரிகள்வரை போயிருக்கின்றன. இவர்களுடைய கூற்றுகளுக்கும் போதனைகளுக்கும் வேதத்தில் எந்தவிதமான ஆதாரமும் இல்லை.

### ஆ. இவர்களுடைய போதனை ஏன் தவறானது?

தோமா தமிழகத்திற்கு வந்தாரா? என்ற ஆராய்ச்சியை எல்லாம் உங்கள் கரத்தில் வைத்துவிட்டு இவர்களுடைய கருத்துக்களின் மூலமும், எழுத்துக்கள் மூலமும் எவ்வளவு தூரம் திருமறை தவறான முறையில் உண்மைக்குப் புறம்பாகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதை எடுத்துக் காட்டுவதுதான் எனது முக்கிய நோக்கம். அதை வைத்தே நீங்கள் உண்மை எங்கிருக்கிறது என்று கண்டு கொள்ள முடியும்.

### தோமா தமிழகம் வந்தாரா?

தோமா இந்தியாவிக்கு வந்தார் என்று இன்றுவரை வரலாற்றினால் நிரூபிக்கப்படவில்லை. இது வழிவழி வந்த நம்பிக்கையே தவிர அதற்கான ஆதாரங்கள் மிகக்குறைவு. தோமாவின் வழியில் வந்ததெனக் கருதப்படும் சீரியக்கிறிஸ்தவம் திருமறையின் போதனைகளுக்கு முரணான காரியங்களைக் கொண்டிருப்பதால் அதைக் கிறிஸ்தவத்தோடு தொடர்புபடுத்திப் பேசுவது தவறானது. இது கத்தோலிக்க மதமும் கிறிஸ்தவமும் ஒன்று என்று கூறுவது போலாகும். மயிலாப்பூரிலும், கேரளத்திலும் கண்டுபிடிக்கப்பட்ட ஆலயங்களில் சிலை வழிபாட்டிற்கான பல அறிகுறிகள் காணப்படுவதால் அதற்கும் திருமறை சார்ந்த கிறிஸ்தவத்திற்கும் தொடர்பிருக்க முடியாது. ஏனெனில் திருமறை சிலை வழிபாட்டை வற்புறுத்திக் கண்டிக்கின்றது (யாத்திராகமம் 20:1-7). அதேநேரம், வரலாற்றை வைத்து திருமறையை நிரூபிக்க முற்படுவதும் தவறான காரியம். வரலாற்றின் கண்டுபிடிப்புகளோடு திருமறையின் போதனைகளும் ஒத்துப்போகுமானால் அதை ஏற்றுக்கொள்ளலாம். வரலாறும் பாவத்தினால் கறைபடிந்து காணப்படுவதால் அதைக்கொண்டு பரிசுத்த வேதத்தை நிரூபிக்க முற்படுவது தவறு.


**திருமறைத்தீபம்**

*மலர் 1 ஏப்பிரல் - ஜூன் 1995 இதழ் 2*

*காலாண்டிதழான 'திருமறைத்தீபம்' 'சவரின் கிரேஸ் சபையினால்' (Sovereign Grace Church) வெளியிடப்படுகிறது.*

*ஆசிரியர்: R. பாலா*



*முகவரி:*

*திருமறைத்தீபம்*
*த. பெட்டி எண் 62-159*
*சில்வியா பார்க்*
*ஆக்லாந்து*
*நியூசிலாந்து*

*The Bible Lamp*
*P. O. Box 62 - 159*
*Sylvia Park*
*Auckland*
*New Zealand*

### திராவிட எழுச்சி இயக்கம்

இவ்வாய்வுகள் தமிழரையும், அவர்களுடைய பண்பாட்டையும், ஆரியர்களுக்கு எதிராக உயர்த்திக் காட்டும் நோக்கத்தில் எழுந்தனவே தவிர திருமறையையும், கர்த்தரையும் மேன்மைப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் எழுந்தவையல்ல. இவ்வாய்வுகளின் முக்கிய நோக்கமே தமிழகத்தில் காணப்பட்ட திராவிட சமயங்கள் ஆரியக் கலப்பற்ற தனித்தன்மை கொண்ட சமயங்களாக இருந்தன என்று நிரூபிப்பதுதான். சித்தர்களின் பாடல்களும், திருக்குறளும் பல தெய்வ வழிபாட்டை ஆதரிக்காமல் அவற்றைக் குறைகூறுகின்றன என்பதற்காக, அவை கிறிஸ்தவ செல்வாக்குப் பெற்றதால்தான் அப்படிப் போதிக்கின்றன என்ற வாதம் பொருத்தமற்றது. இது அக்காலத்தில் ஆரிய எதிர்ப்பினால் எழுந்த போதனையாகவும் இருக்கலாம். அதுமட்டுமல்லாது சைவசித்தாந்தத்திலும், திருக்குறளிலும் திருமறைக்கு ஒவ்வாத அனேக போதனைகள் உண்டு. திருக்குறளில் காணப்படும் தெய்வத்தைக் குறித்த பொதுவான வார்த்தைகள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத்தான் குறிப்பிட்டுக் கூறுகின்றன என்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் இது தமிழ் மரபு என்று சிலர் வாதிட முற்பட்டாலும், திருமறை அதை ஏற்றுக் கொள்ளவில்லை. வேதத்தில் கானப்படாத வேறு பெயர்களை பயன்படுத்தி கர்த்தரை அழைப்பதை வேதம் அனுமதிப்பதில்லை. அதேநேரம் திருவள்ளுவர் இயேசுவை அறிந்திருந்தார் என்பதற்கும் உறுதியான ஆதாரம் இல்லை. உண்மையிலேயே அவர் கிறிஸ்துவை அறிந்திருந்தாரானால் தெளிவாக கிறிஸ்துவை வெளிப்படையாக அறிக்கை யிட்டிருப்பதோடு, திருமறையின் போதனைகளைத்தான் தன்நூலில் விளக்கியிருப்பார். வள்ளுவர் புலால் உண்ணலையும் வன்மையாகக் கண்டிக்கிறார். வேதம் அதைத் தடைசெய்வதில்லை (ரோமர் *14:1-4*).

### திராவிட சமயங்கள்

திராவிட சமயங்கள் என்று அழைக்கப்படுகின்ற சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் ஆகிய ஆறு சமயங்களும் கிறிஸ்தவ திருமறையின் அடிப்படையில் எழுந்த இந்தியத் திராவிட சமயங்கள் என்பது டாக்டர் மு. தெய்வநாயகத்தின் வாதம். கிறிஸ்தவத்திற்கே உரித்தான திரித்துவக் கோட்பாட்டின் அடிப்படையில், பிதா, குமாரன், ஆவியாகிய அதே தேவனைத்தான் திராவிட சமயங்களும் வேறு பெயர்களில், தமிழகத்திற்கேற்ற முறையில் பயன்படுத்தின என்று இவர் எழுதியுள்ளார். ஆனால் இது திருமறைக்கே புறம்பான ஒரு விளக்கம். எந்த ஒரு மனிதனும் திருமறையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ள கர்த்தரைப்பற்றிய திரித்துவ விளக்கங்களைத் தாம் நினைத்த விதத்தில் எந்தவொரு இனம் அல்லது கொள்கைக்கேற்ற விதத்தில் சிறிதளவும் மாற்றி அமைத்து விளக்கங் கொடுக்க முடியாது. அது நம் பார்வைக்கு எவ்வளவுதான் கவர்ச்சியுள்ளதாகவும், நன்மை அளிக்கும் காரியமாகவும் தென்பட்டாலும் திருமறைக்கு விரோதமான காரியம். அதேநேரம் இவர்கள் கூறுவது போல் பரிசுத்த ஆவியைப் பெண்ணாக உருவகப்படுத்தி 'அம்மையாக' அழைக்க திருமறை எவ்விதத்திலும் இடங்கொடுக்காது. இத்தகைய விளக்கங்கள் திருமறையைத் தம் சுயநலத்திற்காகப் பயன்படுத்தும் காரியங்களே தவிர, கர்த்தருடைய வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து அவரை மேன்மைப்படுத்தும் செயல்களல்ல.

### திருமறை, திருக்குறள், சைவசித்தாந்தம்

திருக்குறள், சைவசித்தாந்தம் போன்ற சாதாரண மனிதர்களால் எழுதப்பட்ட நூல்களைக் கர்த்தருடைய வார்த்தையோடு ஒப்பிடுவது வேதத்திற்குப்புறம்பான காரியமாகும். திருமறை தேவ ஆவியினால் அருளப்பட்ட திருவசனமாக இருக்கின்றது. அதன் சத்தியங்களிலும், போதனைகளிலும் எந்தவித தவறிற்கும் இடமேயில்லை. அதை உலக நூல்களோடு ஒப்பிட்டு சமப்படுத்திப் பார்க்கக்கூடாது. டாக்டர் மு. தெய்வநாயகமும் மற்றவர்களும் இதைத்தான் செய்துள்ளார்கள். அதேநேரம், திருக்குறள், சைவசித்தாந்தம் போன்றவற்றில் சில நல்ல கருத்துக்களும், போதனைகளும் காணப்படலாம். அவற்றை மட்டும் வைத்து, திருமறைக்கு சமமாக இப்புத்தகங்களை நாம் மதிப்பிடக்கூடாது. திருமறையைப் பொறுத்தவரையில் அதற்கு சமமான நூல்கள் உலகில் ஒன்றுமேயில்லை. கிறிஸ்துவை அறிந்து கொள்ளவும், கிறிஸ்தவ வாழ்க்கையை வாழவும் ஒருவனுக்கு சத்திய வசனமாகிய திருமறை மட்டுமே தேவையே தவிர, வேறு எந்தப்புத்தகத்தின் உதவியும் தேவையில்லை. ஆகவே திருமறையின் விளக்கத்தைத்தான் நாமனைவரும் நாடவேண்டும், வேறு சமயக் கோட்பாடுகளையோ சித்தாந்தங்களையோ அல்ல.

### கிறிஸ்தவமும் இனப்பாகுபாடும்

திருமறையில் இனப்பாகுபாட்டிற்கு இடமில்லை. அப்படியிருக்க, திருமறை வழிவந்த சமயங்களாக திராவிட சமயங்கள் இருக்குமானால் அவை ஆரிய, பிராமண வெறுப்புள்ளவைகளாக இருப்பதெப்படி? திருமறை எல்லா இனமக்களுக்கும் உரித்தானது. அதன் போதனைகளனைத் தையும் எல்லா இனமக்கள் மத்தியிலும், எந்தவிதப் பாகுபாடுமின்றி அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்த முடியும். நம் இனத்திற்கும், கலாச்சாரத்திற்கும் ஏற்றவிதத்தில் நாம் திருமறையை மாற்றமுடியாது. ஆனால், நமது கலாச்சாரத்தில் இருந்து, தேவனுக்கும், திருமறைக்கும் பொருந்தாது காணப்படும் அம்சங்களைக் களைந்தெடுக்க வேண்டியது நமது கடமை. ஆகவே, ஓரினத்தைப் பெருமைப்படுத்தும் விதத்தில் அமைந்த திராவிட சமயங்களுக்கும், எல்லா இனங்களுக்கும் சொந்தமானதும், எல்லா இனங்களையும் பாவத்திலிருந்து விடுவிக்கும் வல்லமையுள்ள திருமறையின் அடிப்படையிலான கிறிஸ்தவத்திற்கும் எவ்விதத் தொடர்புமில்லை.

கிறிஸ்தவத்தைத் திராவிட சமயங்களோடு ஒப்பிட்டுக் காட்டும் செயலின் பல்வேறு தவறுகளை நாம் அடையாளம் காணமுடிந்தாலும் முடிவாக சில உண்மைகளை மட்டும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இத்தகைய ஆய்வுகளில் ஈடுபட்டிருப்பவர்களும் அதை ஆதரிப்பவர்களும் பரந்த கொள்கையுடையவர்கள் (Liberal). இவர்கள் கர்த்தருடைய வார்த்தையின் பூரணத்துவத்திலும் அதன் போதுமான தன்மையிலும் நம்பிக்கை யுள்ளவர்களல்ல. 'தம்முடைய மகிமையினாலும், காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளியுள்ளது' என்ற பேதுருவின் வார்த்தைகளை இவர்கள் விசுவாசிப்பதில்லை. கல்வாரிச் சிலுவையில் சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள இரட்சிப்பின் வழிமுறைகளிலும் இவர்களுக்கு ஆர்வமில்லை. புற சமயங்களோடு கிறிஸ்தவத்தை சமப்படுத்தி கிறிஸ்துவின் பெயருக்கே இவர்கள் களங்கம் தேடித்தருகிறார்கள். இவர்களின் வார்த்தையில் மயங்கி, இப்போதனை மற்றவர்களை இலகுவாக கிறிஸ்துவிடம் கொண்டுவர உதவுமே என்று எண்ணிச் செயல்படுவது கர்த்தருடைய வார்த்தையை நம் காலில் போட்டு மிதிப்பதற்கு சமம். எரிச்சலுள்ள தேவன் இப்பேராபத்திலிருந்து நம்மைக் காப்பாராக.